
# கட்டணக் கருவிகள்

## சரியான விடைகளைத் தேர்வு செய்க.



### சேவைகளுக்கும் பொருள்களுக்கும் கட்டணக் கருவிகளைப் பயன்படுத்துவோம்.

1. திரு. இராமன் அலுவலகத்தில் அதிக நேரம் வேலை செய்ய வேண்டும். அதே சமயத்தில் அவர் தமது வீட்டு மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். அவர் கட்டணம் செலுத்த எந்த முறையைப் பயன்படுத்தியிருப்பார்?

**இணைந்து கற்போம்**

திரு. தமிழரசன் தம் வீட்டின் அருகாமையில் இருக்கும் பேரங்காடியில் மின்னியல் பொருள்களை வாங்கினார். அவர் எந்தக் கட்டணக் கருவிகளைப் பயன்படுத்த முடியும் என்பதைக் குழுவில் கலந்துரையாடிப் பட்டியலிடுக.

i-Think



| | | |
|---|---|---|
| ரொக்கம் | மின்னியல் கட்டணம் | கடன் பற்று அட்டை |
| காசோலை | அஞ்சல் பணம் | பற்று அட்டை |
| கட்டண அட்டை | வைப்பு அட்டை | மின்னியல் கட்டணம் |
| பற்று சீட்டு | | கட்டணச் சாவடி அட்டை |



## கட்டணக் கருவிகளைப் பயன்படுத்தக் கூடிய சூழலை அறிவோம்.



எந்தச் சூழலுக்குக் கட்டணக் கருவிகளைப் பயன்படுத்த முடியும் என்பதை உன்னால் கூற முடியுமா? பிற மாணவர்களுடன் கலந்துரையாடுக. பின் பயன்படுத்தக்கூடிய கட்டணக் கருவிகளுக்கு (✓) எனக் குறிப்பிடுக.

| கட்டணக் கருவிகள் | இணையம் வழி பொருள் வாங்குதல் | வாகனத்திற்கு எரிபொருள் நிரப்புதல் | திரையரங்கில் நுழைவுச் சீட்டு வாங்குதல் | ஊழியர்களுக்கு ஊதியம் கொடுத்தல் |
|---|---|---|---|---|
|   | | | | |
|   | | | | |
|  | | | | |
|  | | | | |
|   | | | | |
|   | | | | |